## இராமநாதபுரம் மாவட்டம் - புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம்

## சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கான விண்ணப்பம்

| மாவட்டம் | ஊராட்சி ஒன்றியம் / மாநகராட்சி / நகராட்சி | விண்ணப்பிக்கும் பள்ளி |
|---|---|---|
| | | |

புகைப்படம்

| | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர் | |
| 2. | தந்தை / கணவர் பெயர் | |
| 3. | கைபேசி எண் | |
| 4. | விண்ணப்பதாரரின் இருப்பிட முகவரி (குடும்ப அட்டையில் உள்ளபடி மற்றும் வட்டாட்சியர் அவர்களிடமிருந்து பெறப்பட்டது). | |
| 5. | ஊராட்சி ஒன்றியம் / நகராட்சியின் பெயர் | |
| 6. | கல்வித் தகுதி (சான்று, இணைக்கப்பட வேண்டும்) குறைந்த பட்சம் 10 தேர்ச்சி / தோல்வி பெற்றிருக்க வேண்டும். தமிழில் கட்டாயம் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். | |
| 7. | பிறந்த தேதி / வயது | |
| 8. | சாதி மற்றும் உட்பிரிவு (வட்டாட்சியர் சான்று இணைக்கப்பட வேண்டும்) | |
| 9. | மாற்றுத்திறனாளி (ஆம் எனில் மாற்றுத் திறனாளி அடையாள அட்டை இணைக்கப்பட வேண்டும்) | ஆம் / இல்லை |
| 10. | ஆதரவற்ற விதவை / ஆதரவற்ற பெண் / கணவரால் கைவிடப்பட்டவரா ? ஆம் எனில் சான்று இணைக்கப்பட வேண்டும் | ஆம் / இல்லை |
| 11. | பணியிடம் கோரும் மையம் / பள்ளியின் பெயர் | |
| 12. | விண்ணப்பதாரரின் இருப்பிடத்திற்கும் பணியிடம் கோரும் மையத்திற்கும் இடைப்பட்ட தூரம் (மூன்று கிலோ மீட்டருக்குள் இருத்தல் வேண்டும்) | |

நாள் :

விண்ணப்பதாரர் கையொப்பம்

இடம் :

இணைப்பு :

சமூக நலத்துறையின் கீழ் செயல்படும் பள்ளி சத்துணவு மையங்களில் காலியாக உள்ள 187 சமையல் உதவியாளர்கள் பணியிடங்களை தொகுப்பூதிய முறையில் நிரப்பிட அரசாணை எண் (நிலை) 95, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை (சந4-2), நாள் : 16.12.2024-ன் மூலம் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்படும் பணியாளர்களுக்கு ஓராண்டு கால பணிக்குப் பின்பு சிறப்பு காலமுறை ஊதியத்தில் (ஊதிய நிலை 1) (Level of Pay – ரூ.3000 – 9000)) ஊதியம் பெறுவர். கல்வித் தகுதி மற்றும் பிற தகுதிகளுக்கு 50% மதிப்பெண்களும் நேர்முகத் தேர்விற்கு 50% மதிப்பெண்களும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நிபந்தனைகள் :

1. பெண்கள் மட்டுமே இப்பணிக்கு விண்ணப்பிக்க இயலும்.
2. அறிவிக்கையில் தெரிவித்துள்ளவாறு வயது நிர்ணயம் செய்யப்படும். (பொதுப் பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் - அறிவிப்பு நாளில் 21 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். பழங்குடியினர் - அறிவிப்பு நாளில் 18 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர் - அறிவிப்பு நாளில் 20 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்).
3. கல்வித் தகுதி 10 ஆம் வகுப்பு தோல்வி / தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
4. விண்ணப்பிக்கும் கால அளவு **15.04.2025 முதல் 26.04.2025** முடிய (ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்கள் தவிர அனைத்து வேலை நாட்களிலும் (சனிக்கிழமை உட்பட) காலை 10.00 மணி முதல் மாலை 5.45 வரை)
5. விண்ணப்பதாரரின் தகுதிகள் அனைத்தும் எந்த தேதியில் அறிவிப்பு வெளியிடப்படுகிறதோ அந்த தேதியினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட வேண்டும்.
6. நியமனம் கோரும் மையத்திற்கும் விண்ணப்பதாரரின் குடியிருப்பிற்கும் இடைப்பட்ட தூரம் 3 கி.மீக்குள் இருக்க வேண்டும். (ஊராட்சி – குக்கிராமம்- வருவாய் கிராமம் போன்றவைகள் கணக்கில் எடுத்துக் கொள்ள தேவையில்லை.
7. அனைத்து நியமனங்களும் அரசு விதிகளின்படி 200 புள்ளிகள் இனசுழற்சி முறையை பின்பற்றி மேற்கொள்ளப்படும். முன்னுரிமை தொடர்பாக அரசு விதிகள் மற்றும் அரசாணைகள் தெரிவித்துள்ளபடி பணி நியமனம் மேற்கொள்ளப்படும்.
8. மாற்றுத் திறனாளி ஒதுக்கீடு தொடர்பாக கீழ்க்காணும் குறைபாடுகளுடைய மாற்றுத்திறனாளிகள் சமையல் உதவியாளர் பணிக்கு தகுதியானவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
    1. குறைவான பார்வைத் திறன் (மூக்குக் கண்ணாடி மூலம் சரி செய்யப்பட்டது)
    2. உடல் இயக்க குறைபாடு (ஒரு கால்)
    3. குணப்படுத்தப்பட்ட தொழுநோய் (40% கைகளின் முழு செயல்பாட்டுதிறன், உணர்திறன் மற்றும் செயல்திறன் உள்ளடக்கியது)
    4. திரவ வீச்சினால் பாதிக்கப்பட்டவர்கள்
    5. குறிப்பிட்ட கற்றல்திறன் குறைபாடு (மிதமான)

9. சமையல் உதவியாளர் பணி நியமனத்தில் மாற்றுத் திறனாளிகளை நியமனம் செய்யும்போது அரசாணையினை பின்பற்றி மாற்றுத் திறனாளி அடையாள அட்டையினை பரிசீலித்து நியமனம் செய்ய வேண்டும்.
10. சிறுபான்மையினர் பள்ளிக்கு இனசுழற்சி முறை பின்பற்றப்பட மாட்டாது.
11. விண்ணப்பம் பெறுவதற்கான கடைசி நாளுக்கு பின் (**26.04.2025 மாலை 5.45-க்குப்பின்**) பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
12. அஞ்சல் துறையின் மூலம் விண்ணப்பங்கள் அனுப்பப்படும்போது ஏற்படும் காலதாமதத்திற்கு துறை பொறுப்பேற்காது.
13. தகுதியான விண்ணப்பதாரருக்கு மட்டுமே அழைப்பாணை வழங்கப்படும்.
14. நேர்முகத் தேர்விற்கு கலந்து கொள்ளும் விண்ணப்பதாரருக்கு பயணப்படி ஏதும் வழங்க மாட்டாது.
15. நேர்முகத் தேர்விற்கான அழைப்பாணை கிடைக்கப்பெற்றதால் மட்டுமே, விண்ணப்பதாரர் பணி நியமனம் கோர இயலாது.
16. நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளாதவரை எக்காரணம் கொண்டும் தெரிவு செய்ய இயலாது.
17. காரணம் ஏதும் குறிப்பிடாமல் நியமனம் அறிக்கையினை இரத்து செய்வதற்கு / திரும்ப பெறுவதற்கு / திருத்துவதற்கு / கெடு தேதியினை நீட்டிப்பதற்கு மாவட்ட ஆட்சியருக்கு முழு உரிமை உண்டு.
18. விண்ணப்பதாரர்கள் தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் / நகராட்சி அலுவலகங்களில் விண்ணப்பிக்கலாம்.
19. நேர்காணலில் கலந்து கொள்ளும் விண்ணப்பதாரர்கள் கட்டாயம் அசல் சான்றிதழ்கள் மற்றும் முன்னுரிமை தொடர்பான அசல் சான்றுகளுடன் கலந்து கொள்ள வேண்டும். அசல் சான்றிதழ்கள் கொண்டு வராத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.